


தலைமைச் செயலகத்தில், 7.8.2023 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஒரிசா மாநிலம், புவனேஸ்வர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் மொழியைக் கற்பிக்க, வகுப்பறைகள் மற்றும் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் ரூபாய் 15 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் மரு. இரா. செல்வராஜ்,தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.

### விருதுநகரில் சிப்காட் மூலம் 1,052 ஏக்கரில்

# ரூ.2 ஆயிரம் கோடியில் மெகா ஜவுளிப் பூங்கா!

## பணிகள் தீவிரம்! 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு!

சென்னை, ஆக. 9 -

விருதுநகர் மாவட்டத்தில் சிப்காட் மூலம் 1,052 ஏக்கரில் ரூ.2 ஆயிரம் கோடியில் தமிழகத்தின் 'மெகா' ஜவுளி பூங்கா அமைக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்தியா முழுவதும் தமிழகம், தெலங்கானா, கர்நாடகா, மராட்டியம், குஜராத், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் ஜவுளி பூங்காக்கள் அமைக்க ஒன்றிய அரசு அறிவிப்பு வெளியிட்டது. அதன்படி, தமிழகத்தில் விருதுநகர் மாவட்டத்தில் பி.எம். மித்ரா ஜவுளி பூங்கா இ.குமாரலிங்க புரத்தில் சிப்காட் நிலத்தில் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஜவுளி பூங்காவுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மார்ச் 22ல் முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வர்த்தகம், ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல் முன்னிலையில் கையழுத்திடப்பட்டன. காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது இதற்கான பணிகள் நடந்து வருகிறது.

இதுகுறித்து தமிழக அரசின் சிப்காட் உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: விருதுநகர் மாவட்டத்தில், 1,052 ஏக்கர் சிப்காட் நிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஒன்றிய, மாநில அரசுகள் ரூ.2 ஆயிரம் கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்துகிறது. இதில் 51 சதவீதம் ஒன்றிய அரசும், 49 சதவீதம் மாநில அரசும் நிதி ஒதுக்குகிறது. இ.குமாரலிங்கபுரத்தை மையமாக கொண்டு அருகில் உள்ள அச்சம்பட்டி, கோவில்புலிக்குத்தி கிராமங்கள் வரை இந்த ஜவுளி பூங்கா அமைகிறது. இதன்மூலம் 2 லட்சம் பேர் வேலை வாய்ப்பு பெறுவர். அதிவீன உட்கட்டமைப்பு, சிறப்பு உற்பத்தி பகுதிகள், சமூக உட்கட்டமைப்பு, உற்பத்தியை உடன் தொடங்க சிறப்பு வசதிகள், வணிகப்பகுதி, பொது அடிப்படை வசதிகள் ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளன.

ஒரு துணியின் உருவாக்க தேவையான அனைத்து வசதிகளுடன் ஆலைகள் அமைக்கப்பட உள்ளன. தையல், டிசைனிங், டை உள்ளிட்ட ஜவுளி தொடர்பான அனைத்து தொழில்கள் பூங்காவில் இடம்பெற உள்ளன. இங்கு ஊழியர்களுக்கான குடியிருப்பு வசதிகளும் செய்யப்படும். ஒரு ஏக்கரில் சிப்காட் அலுவலகம் அமைய உள்ளது. நான்கு வழிச்சாலையில் இருந்து குமாரலிங்கபுரத்திற்கு செல்லும் ரோடு 30 மீட்டருக்கு மாநில நெடுஞ்சாலைத்துறையால் அகலப்படுத்தப்பட உள்ளது. 1.8 கி.மீ. வரை விரிவாக்கம் செய்யப்படும். மண் பரிசோதனை முடிந்தவிட்ட நிலையில் விரைவில் கட்டுமான பணிகள் துவங்க உள்ளன. பல கட்டங்களாக பணிகள் நடக்க உள்ளன. ரூ.36 கோடிக்கு குடிநீர் பிளான்ட் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட உள்ளது.

இந்த ஜவுளி பூங்கா முழுவீச்சில் செயல்பாட்டுக்கு வந்தவுடன் குமாரலிங்கபுரம், கோவில்புலிக்குத்தி கிராமங்களில் உள்ள துவக்கப்பள்ளிகளை தத்தெடுத்து அப்பள்ளிக்கு தேவையான வசதிகள் செய்து தரப்பட உள்ளன. பல கட்டங்களாக வளர்ச்சி பணிகள் செய்யப்பட உள்ளன. முதல் கட்டத்தில் அமைய உள்ள ஆலைகள் மூலம் 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் பேர் வரை பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும். அடுத்தடுத்த கட்டங்களில் இதன் எண்ணிக்கை இன்னும் அதிகமாகி 2 லட்சம் வேலைவாய்ப்புகள் வரை உருவாகும். இது விருதுநகர் மாவட்ட மத்திய பகுதி மக்களுக்கு கிடைத்த பெரிய வரப்பிரசாதம் ஆகும். ஜவுளி பூங்காவிற்கான மாஸ்டர் பிளானை ஸ்கூல் நெட் நிறுவனம் செய்து வருகிறது. ஜவுளி தொழில்கள் அனைத்திற்கும் இடமளிக்கும் வகையில் அலகு வாரியாக கட்டிடங்கள் அமைக்கப்பட உள்ளன.

குறிப்பாக சாய கழிவுகளை சுத்திகரிக்க சி.யு.டி., சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. விரைவில் நில விலை உறுதி ஆகி அறிவிக்கப்படும். திட்ட அலுவலகம் ஒரு ஏக்கரில் குமாரலிங்கபுரத்தில் அமைய உள்ளது. மண் பரிசோதனை முடிந்து விரைவில் பணிகள் துவங்கும். 160 முதல் 180 டெக்ஸ்டைல், அப்பேரல் அலகுகள் ஜவுளி பூங்கா மூலம் இடம்பெற உள்ளன. தமிழகத்தின் மிகப்பெரிய ஜவுளி பூங்காவாக இது இருக்கும். ஒவ்வொரு கட்டமாக இதன் வளர்ச்சி இருக்கும். தற்போது 11 ஜவுளி நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளன. உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, எம்.இ., பி.எஸ்.சி. படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகளவில் கிடைக்கும் என்றார்.

### இடிப்பது வீடுகளையல்ல; மதச்சார்பற்ற நாட்டை!

# இதைத் தடுப்பது தேச பக்தர்களின் உடனடி கடமை!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் - பா.ஜ.க. அரசுகளுக்கு கண்டனம்!

சென்னை, ஆக. 9 -

மணிப்பூரை தொடர்ந்து பா.ஜ.க. ஆளும் ஹரியானாவில் வன்செயல்கள் தொடர்ந்து வருகிறது. அதிகாரத்தை கையில் வைத்துள்ள மமதையில் பா.ஜ.க. மாநில அரசுகள் இடித்துக் கொண்டிருப்பது வீடுகளையல்ல; மதச்சார்பற்ற நாட்டை இடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பது தேச பக்தர்களின் உடனடி கடமையென 'தீக்கதிர்' நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.



தீக்கதிர்

2023 ஆகஸ்ட் 08 செவ்வாய்க்கிழமை

வீட்டை அல்ல, நாட்டை இடிக்கிறார்கள்

மணிப்பூரை தொடர்ந்து பாஜக ஆளும் ஹரியானா மாநிலத்தில் வன்செயல்கள் தொடர்ந்து வருகின்றன. வன்முறை வெறியாட்டத்தால் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். ஹரியானாவை ஆளும் பாஜக அரசு கலவரத்திற்கு காரணமான விஎச்பி குண்டர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அப்பாவி முஸ்லிம் மக்களின் கடைகள், ஹோட்டல்களை தேடித் தேடி இடித்து வருகிறது.

உபி, மாநிலத்தில் சிறுபான்மை மக்களுக்குச்

அது வருமாறு:

மணிப்பூரை தொடர்ந்து பா.ஜ.க. ஆளும் ஹரியானா மாநிலத்தில் வன்செயல்கள் தொடர்ந்து வருகின்றன. வன்முறை வெறியாட் டத்தால் ஆறுபேர்உயிரிழந்துள்ளனர். ஹரியானாவை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்திற்கு காரணமான விஎச்பி குண்டர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அப் பாவி முஸ்லிம் மக்களின் கடைகள், ஹோட்டல் களை தேடித் தேடி இடித்து வருகிறது.

உ.பி., மாநிலத்தில் சிறுபான்மை மக்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகளை புல்டோசர்கள் மூலம் இடித்துத் தள்ளு வதை வாடிக்கையாக கொண்டுள்ளது பா.ஜ.க. அரசு. புதுதில்லியிலும் நீதிமன்ற உத்தரவை மீறி ஏழை, எளிய இஸ்லாமிய மக்களின் குடிசைகளை இடித்துத் தள்ள முயன்ற போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் பிருந்தா காரத் புல்டோசர் முன்பு நெஞ்சுரத்துடன் நின்று இதயமற்ற அந்த அரசு எந்திரத்தை பின்வாங்கச் செய்தார்.

மணிப்பூரில் நீடிக்கும் வன்செயல்களைத் தடுக்க ஒன்றிய அரசோ, மாநில பா.ஜ.க. அரசோ எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை. இது குறித்து நாடாளுமன்றத்தில் வந்து விளக்க மளிக்கக் கூட பிரதமர் மோடி தயாராகயில்லை. அந்த மாநிலத்தில் புதிய பகுதிகளுக்கு கலவரம் பரவுகிறது.

இந்த நிலையில் ஹரியானா மாநிலத்திலும் இந்துத்துவா பயங்கர வாதிகள் கலவரத்தை ஏற்படுத்தியுள்ளனர். பசு பாதுகாப்பு என்ற பெயரில் இரண்டு முஸ்லிம்களை கொலைசெய்த மோனு மனோசர் விஎச்பி ஊர்வலத்தில் பங்கேற்க இருப்பதாக வெளியான தகவல்தான் கலவரத் திற்கு காரணம். அதே போல மற்றொரு பயங்கர வாதியான பிட்டு பஜ்ரங்கி என்பவர் வெளியிட்ட காணொலியும் பதற்றத்தை அதிகரித்தது.

ஆயுதங்களுடன் வன்முறையில் ஈடுபட்ட வி.எச்.பி. உள்ளிட்ட இந்துத்துவா தீவிர வாதிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. ஆனால் முஸ் லிம்களுக்குச் சொந்தமான ஹோட்டல்கள், வீடுகள், மாநில அரசினால் இடித்து தரை மட்டமாக்கப்படுகின்றன. ஏற்கெனவே அச்சமடைந்துள்ள சிறு பான்மை மக்களை மேலும் அச்சுறுத்துவதாகவே மாநில அரசின் நடவ டிக்கை உள்ளது. ஒன்றிய அரசும் 'நடப்பதெல்லாம் நன்மைக்கே' என்பது போல வேடிக்கை பார்க்கிறது.

இடிக்கப்படும் கட்டி டங்கள் சட்டவிரோதமாக கட்டப்பட்டவை என மாநில அரசு கூறுகிறது. முஸ்லிம் மக்களின் கட்டி டம் மட்டும்தான் சட்ட விரோதமாகக் கட்டப் பட்டுள்ளதா? பா.ஜ.க.வை சேர்ந்த ஒருவரது கட்டிடம் கூட இடிக்கப்படவில் லையே ஏன்? அதிகாரத்தை கையில் வைத்துள்ள மமதையில் பா.ஜ.க. மாநில அரசுகள் இடித்துக் கொண்டிருப்பது வீடு களை அல்ல, மதச்சார்பற்ற இந்த நாட்டை இடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பது தேச பக்தர்களின் உடனடிக் கடமையாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வங்கி

# டெபாசிட் தொகைக்கான வட்டியை இரட்டிப்பாக்கிடுக!

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 9 -

"மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பெயரில் வங்கிகளில் செலுத்தப்படும் வைப்புத் தொகைகளுக்கான வட்டியை இரட்டிப்பாக்கி வழங்கிட வேண்டும்" என தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதில் "மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பெற்றோர்கள் இதர சராசரியான குழந்தைகளின் பெற்றோர்களை விடவும் பல்வேறு மருத்துவ செலவு, பராமரிப்பு செலவு, கல்வி, சமூக, பொருளாதார பாதுகாப்பு என கூடுதல் பொறுப்புக்கும், சுமைக்கும் ஆளாகின்றனர்.

மேலும், அவர்கள் தங்கள் குழந்தையின் எதிர்கால நிதி ஆதாரத்தைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். ஏனெனில், மாற்றுத் திறனாளியான குழந்தைகளை வளர்ப்பது, அதிலும் இது போல் சிறப்புத் தேவைகளைக் கொண்ட மனநலம் குன்றிய குழந்தைகளை வளர்ப்பது என்பது மிகுந்த சிரமத்தையும், பொறுப்பையும் கொண்டது. எனவே அவர்கள் கடினமாக உழைத்து, மனநலம் குன்றிய தங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை வழங்க முயற்சி செய்கிறார்கள்.

அதாவது அவர்கள் மறைவுக்குப் பிறகும் கூட ஒரு பாதுகாவலரின் ஆதரவில் தங்கள் குழந்தையின் எதிர்காலம் பாதுகாப்பாகவும், சிறப்பாகவும் இருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

அந்த வகையில் தங்கள் குழந்தையின் பெயரில் வங்கிகளில் செலுத்தும் வைப்புத்தொகைக்கான வட்டி பின்னாளில் அவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்க வேண்டும் என்ற அக்கறையிலும், கவலையிலும்தான் பணத்தை வங்கிகளில் வைப்பு நிதியாக செலுத்துகின்றனர்.

தற்போது அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் பொது சேமிப்புத் திட்டங்களின் கீழ் சமீபத்திய நிலையான வைப்பு வட்டி விகிதங்களின்படி, பொதுமக்கள் அதிகபட்சமாக 7.2% வட்டி விகிதத்தைப் பெறுகிறார்கள் மற்றும் மூத்த குடிமக்கள் தங்கள் வைப்புத்தொகையில் அதிகபட்சமாக 8% பெறலாம் என்ற நிலை உள்ளது. ஆனால் மனநலம் குன்றிய குழந்தைகளுக்கான வைப்புத் தொகைக்கு சராசரியான வட்டியே வழங்கப்படுகிறது.

தற்போது அனைவரையும் உள்ளடக்கிய கொள்கைகளோ, மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புத் திட்டங்களை நிர்வகிக்கும் சட்டங்களோ கூட இந்த நாட்டில் தெளிவாக இல்லை. எனவே குறைந்த பட்சம் அவர்களது எதிர்கால சமூக, பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் கடமையாகும்.

ஆகவே, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வைப்புத்தொகைக்கான வட்டியை இரட்டிப்பாக்கி வழங்கிடும் சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு விரைந்து எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய அரசு உள்நாட்டு

# பாரம்பரிய தயாரிப்புகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 9 -

டெல்லியில் கோடைக் கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, ஒன்றிய அரசு உள்நாட்டு பாரம்பரிய தயாரிப்புகளை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து மாநிலங்களவையில், மாற்றுப் பொருட்களின் இறக்குமதியால், நம் நாட்டுப் பாரம்பரியப் பொருட்கள் பாதிக்கப்படுவதை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா, உதாரணமாக பிளாஸ்டிக் கேஸ் லைட்டர்களின் இறக்குமதியால் பாரம்பரிய தீப்பெட்டித் தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பூர்வீக பாரம்பரிய தயாரிப்புகளை பாதிக்கும் இதுபோன்ற இறக்குமதி பொருட்களை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்ததா, அப்படியானால், மாநில வாரியாக பொருட்களின் விவரங்கள், உள்நாட்டு பாரம்பரிய தயாரிப்புகளை பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து பதிலளித்து பேசிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சக மாநில அமைச்சர் அனுப்ரியா படேல், நாட்டில் உள்ள பூர்வீக பாரம்பரிய பொருட்களை பாதுகாக்க அரசு உறுதி பூண்டுள்ளது. சமீபத்தில் பிளாஸ்டிக் காஸ் லைட்டர் இறக்குமதியால் பாரம்பரிய தீப்பெட்டி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. சிகரெட் லைட்டர்களுக்கான இறக்குமதிக் கொள்கையை "இலவசம்" என்பதிலிருந்து "கட்டுப்படுத்தப் பட்டது" என்று வெளிநாட்டு வர்த்தக பொது இயக்குநரகம் திருத்தி யுள்ளது.

உள்நாட்டு பாரம்பரிய தயாரிப்புகளில் மாற்று பொருட்களின் இறக்குமதியின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான எந்த ஒரு ஆய்வும் வர்த்தகத் துறையால் செய்யப்படவில்லை. இந்தத் துறை பல்வேறு அமைச்சகங்களின் கீழ் வருகிறது மற்றும் தனிப்பட்ட அமைச்சகங்கள் உள்நாட்டு பாரம்பரிய தயாரிப்புகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கின்றன.

எடுத்துக்காட்டாக, கைத்தறித் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, இந்திய அரசு கைத்தறி (உற்பத்திக்கான கட்டுரைகளுக்கான இட ஒதுக்கீடு) சட்டம், 1985ஐப் பிரகடனப்படுத்தியுள்ளது. கைத்தறி உற்பத்திக்காக வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. தவிர, உள்நாட்டு மற்றும் பாரம்பரிய கைத்தறி தயாரிப்புகள் புவியியல் குறியீடு (ஜிஐ) சட்டம், 1999 இன் கீழ் பதிவு செய்வதன் மூலம் ஊக்குவிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன என்றார்.

# எழும்பூர் தொகுதியில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

சென்னை, ஆக.9-

முத்தமிழறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, கழக சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 78 அ வட்டம், சூளை, பெரிய தம்பி தெருசட்டண்ணன் தெரு சந்திப்பு, 99அ வட்டம், புரசைவாக்கம், டாக்டர் அழகப்பா சாலை, 61ஆவது வட்டம், புதுப்பேட்டை, ஆதித்தனார் சாலை மற்றும் 108வது வட்டம், சேத்துப்பட்டு, மெக்நிக்கல்ஸ் சாலை ஆகிய நான்கு இடங்களில் ஏழை எளியோர், மாணவமாணவியர் உள்ளிட்ட 1,000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்.

எழும்பூர் தொகுதி, 78 அ வட்டம், சூளை, பெரிய தம்பி தெருசட்டண்ணன் சாலை சந்திப்பில் முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன் தலைமையிலும்; 99 அ வட்டம், புரசைவாக்கம், டாக்டர் அழகப்பா சாலையில் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார் தலைமையிலும்; 61ஆவது வட்டம், புதுப்பேட்டை ஆதித்தனார் சாலையில் பாலாஜி அன்புமணி தலைமையிலும்;

108ஆவது வட்டம், சேத்துப்பட்டு, மெக்நிக்கல்ஸ் சாலையில் முன்னாள் பகுதிச் செயலாளர் ஜெ.விஜயகுமார் தலைமையிலும் நடந்த இந்நான்கு நிகழ்வுகளில் தலா 250 பேர் வீதம் 1,000 பேருக்கு மதிய உணவினை இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. மகளிர் தொண்டரணி சார்பில் நெமிலி கிழக்கு ஒன்றியம் பரமேஸ்வர மங்கலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திண்டுக்கல் ஐ. லியோனி பட்டிமன்றத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி துவங்கி வைத்து கண்டுகளித்தார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி, நெமிலி ஒன்றிய குழு தலைவர் பெ.வடிவேல்,மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானி வடிவேலு மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்

# ஆலப்பாக்கம் கு.சண்முகம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 9-

மாமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆலப்பாக்கம் கு. சண்முகம் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

பெருநகரச் சென்னை மாநகராட்சியின் 146ஆவது வார்டு மாமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆலப்பாக்கம் கு. சண்முகம் அவர்கள், நேற்று (7.8.2023) கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணியில் பங்கேற்றிருந்த நிலையில் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரும் அடைந்தேன்.

மதுரவாயல் பகுதியில் கழகம் வளர்த்த செயல்வீரரான அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.




திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட அவைத்தலைவர் த. வேணுகோபால், தலைமையில் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் இரா.ஸ்ரீதரன், கு.கருணாநிதி, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீத்தாபதி, கே.வி. ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி. சரவணன், ஒ.ஜோதி, எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, என்.பாண்டுரங்கன், ப்ரியாவிஜயரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, விஜியலட்சுமிரமேஷ், க.சௌந்தரராஜன், பார்வதி சீனுவாசன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.